**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, மதுராந்தகம்**

**முன்னிலை:– திருமதி.N.வள்ளியம்மா, B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண் 1, மதுராந்தகம்.**

**2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11 ஆம் நாள் வியாழன்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 451/2024**

| | |
|---|---|
| அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ஜி1 மதுராந்தகம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 398/2024<br>பிரிவுகள். 296(b), 118(1), 351(3) of BNS. | ...குற்றமுறையீட்டாளர் |
| /எதிரிடை/ | |
| தனசேகர், வயது.33, த/பெ.காசி,<br>எண்.15, திருவள்ளுவர் தெரு,<br>தண்டலம் கிராமம், மொறப்பாக்கம்,<br>மதுராந்தகம் தாலுக்கா,<br>செங்கல்பட்டு மாவட்டம். | ...எதிரி |

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவு ROC. No. 814/2020/RG/F1, Dt 07.04.2021 இன் படியான இவ்வழக்கின் விவரங்கள் கீழ்வருமாறு :–

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. I, Madurantakam. |
| 2. | Name of the Judge | Tmt. N.Valliamma, B.Sc., B.L., |
| 3. | Date of Judgment | 11.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC.237/2025<br>TNCG – 15– 001760–2024 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Inspector of Police, Madurantakam PS.<br>**Complainant** |
| | | தனசேகர், வயது.33, த/பெ.காசி,<br>**Accused** |
| 6. | Date of Occurrence | 06.07.2024 |
| 7. | Date of Complaint | 07.07.2024 |
| 8. | Date of Arrest if any and remand | Anticipatory bail–15.07.2024 |

<table>
<tr><td>9.</td><td>Period of Remand of the Accused</td><td>---</td></tr>
<tr><td>10.</td><td>Date of release on bail</td><td>Anticipatory bail–15.07.2024</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final Report</td><td>01.08.2024</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Sessions</td><td>---</td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 316 of BNSS</td><td>11.12.2024</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the Witnesses</td><td>
<table>
<tr><th>Witness</th><th>Cheif</th><th>Cross</th></tr>
<tr><td>PW1</td><td>17.07.2025</td><td>17.07.2025</td></tr>
<tr><td>PW2</td><td>17.07.2025</td><td>17.07.2025</td></tr>
<tr><td>PW3</td><td>17.07.2025</td><td>17.07.2025</td></tr>
<tr><td>PW4</td><td>07.08.2025</td><td>07.08.2025</td></tr>
<tr><td>PW5</td><td>07.08.2025</td><td>07.08.2025</td></tr>
<tr><td>PW6</td><td>16.10.2025</td><td>16.10.2025</td></tr>
<tr><td>PW7</td><td>11.11.2025</td><td>11.11.2025</td></tr>
<tr><td>PW8</td><td>21.05.2026</td><td>21.05.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 317 of the Code</td><td>------</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s.351 of the BNSS</td><td>02.06.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance / production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior Courts and the results there of</td><td>------</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>22.08.2024</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>02.06.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>11.06.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>---</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 23. | If any delay, give Explanation | --- |

*********************

இவ்வழக்கானது 22.08.2024ம் இந்நீதிமன்றத்தால் கோப்பில் எடுக்கப்பட்டு இறுதி விசாரணைக்காக 02.06.2026-ம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திருமதி.M.நித்யா, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.B.தினேஷ்பாபு, திரு.S.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

**1.** இவ்வழக்கானது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**2.** இவ்வழக்கின் புகார்தாரர் அருண்ராஜ் என்பவருக்கு இவ்வழக்கில் பாதிக்கப்பட்டவரான பரத் என்பவர் அக்கா மகன் ஆவார். தண்டலம் கிராமத்தை சேர்ந்த பரத் என்பவருக்கும் அதே ஊரைச் சேர்ந்த இவ்வழக்கின் எதிரியான தனசேகர் என்பவருக்கும் ஏற்கனவே நிலம் சம்மந்தமான பிரச்சினை இருந்து வரும் நிலையில் பரத் என்பவர் அவரது ஊருக்கு பக்கத்து ஊரான மதுராந்தகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தண்டரைப்பேட்டை கிராமத்தில் நடைபெற்ற திருவிழாவில் கலந்துகொள்ள அவரது சித்தி பாப்பி என்பவர் வீட்டிற்கு சென்றுள்ளார். திருவிழாவில் எதிரி தனசேகர் என்பவரும் திருவிழாவிற்கு ரேடியோ செட் போட சென்றுள்ளார். கடந்த 06.07.2024ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் தண்டரைப்பேட்டை ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் அருகே பரத் என்பவர் நின்றிருந்த போது, அங்கே சென்ற எதிரி தனசேகர் என்பவர் பரத் என்பவரை பார்த்து ஓத்தா தெவிடியா பையா நீ எப்ப தனியா மாட்டுவன்னுதான் பார்த்தேன். உன்னை என்ன செய்றேன் பாரு என்று அவரது கையில் வைத்திருந்த திருப்புலியால் பரத் என்பவர் முகத்தில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்திவிட்டு இதோட என் கூட பிரச்சினைக்கு வந்தால் உன்னை காலி செய்துவிடுவேன் என்று மிரட்டிவிட்டு சென்ற குற்றத்திற்காக எதிரி மீது பிரிவுகள் 296(b),

118(1), 351(3) of BNS ன் கீழ் தண்டிக்கப்படதக்கவர் என்று மதுராந்தகம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.** குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், வழக்கினை 22.08.2024 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில் சென்றிருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் பிரிவு 230 of BNSS கீழ் குற்றப் பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து பிரிவு 263 of BNSS ன் கீழ் எதிரியின் மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றம் குறித்து எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு பிரிவு 265 of BNSS ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

## தீர்வு:—

**5.** அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 7 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் அரசுத் தரப்பால் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதம் செய்தார்.

**6.** இவ்வழக்கின் புகார்தாரரான குற்றமுறையீட்டாளர் அளித்த புகாரில் கடந்த 06.07.2024 ம் தேதி மாலை தண்டரைப்பேட்டை கிராமத்தில் திருவிழா நடைபெறுவதால் குற்றமுறையீட்டாளரின் தங்கை பாப்பி வீட்டிற்கு திருவிழாவிற்காக சென்ற போது, தண்டலம் கிராமத்தை சேர்ந்த குற்றமுறையீட்டாளரின் அக்கா புனிதா அவர்களின் மகன் பரத் என்பவர் மேற்படி திருவிழாவிற்கு குற்றமுறையீட்டாளரின் தங்கை வீட்டிற்கு வந்திருந்தார். அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் தண்டலம் கிராமத்தை சேர்ந்த தனசேகர் என்பவர் மேற்படி கிராமத்தில் ரேடியோ செட் போடுவதால் அங்கிருந்து வேலை செய்த போது, குற்றமுறையீட்டாளரின் அக்கா மகன் பரத் என்பவருக்கும் மேற்படி தனசேகர் என்பவருக்கும் ஏற்கனவே சொத்து சம்மந்தமாக பிரச்சினை இருப்பதால் எனது அக்கா மகனை பார்த்த தனசேகர் பலரது முன்னிலையில் அசிங்கமாக பேசி நீ இன்னைக்கு என்கிட்ட மாட்டுன உன்ன என்ன செய்றேன் பாரு என்று சொல்லிகொண்டே தான் கையில் வைத்திருந்த திருப்புலியை வைத்து குற்றமுறையீட்டாளரின் அக்கா மகன் பரத் கண்ணில் குத்தியுள்ளார். உடனே குற்றமுறையீட்டாளரின் அக்கா மகனுக்கு அதிகப்படியான ரத்தம் வெளிவந்ததால் உடனே மயக்கம் அடைந்துவிட்டார். குற்றமுறையீட்டாளரும் அங்கிருந்தவர்கள் உதவியுடன் உடனே மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் அங்கும் சிகிச்சை அளிக்க முடியாததால் மேல் சிகிச்சைக்காக எழும்பூர் கண் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு தற்போது மேற்படி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலும் மேற்படி தனசேகர் குற்றமுறையீட்டாளரின் அக்கா மகன் பரத்தை பார்த்து உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்றும் கொலைமிரட்டல் விடுத்துள்ளார். எனவே தனசேகர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**7.** மேற்படி அ.சா.1 தன்னுடைய வாய்மொழி சாட்சியத்தில் 06.07.2024 அன்று மதியம் என் அக்கா போன் செய்து தனசேகரன் என்பவர் என் அக்கா மகன் பரத் என்பவரை அடித்துவிட்டதாக சொன்னார்கள். அடிப்பட்ட என் அக்கா மகனை முதலில் என் அக்கா அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு சிகிச்சை அளிக்க முடியாமல் சென்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். என் அக்கா நடந்த சம்பவம் பற்றி என்னை போலிசில் புகார் அளிக்க

சொன்னார். நான் மதுராந்தகம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 தனது வாய்மொழி சாட்சியத்தில் ஏற்கனவே எங்கள் வீட்டிற்கும் என் அப்பாவின் தங்கை வீட்டிற்கும் நிலம் சம்மந்தமான பிரச்சினை இருந்தது. அதற்கு என் அத்தையும் புகார் கொடுத்தார். நாங்களும் புகார் கொடுத்திருந்தோம். 06.07.2024 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் எங்கள் பக்கத்து ஊரில் தண்டரைப்பேட்டையில் நடந்த பாட்டு கச்சேரிக்கு நான் சென்றிருந்தேன். அங்கு நான் என் நண்பர்களுடன் பேசி கொண்டிருந்த போது ஆஜர் எதிரி வந்து என்னை தேவிடியா பையா என்றும் மேலும் அசிங்கமாக திட்டி என்னை கையால் அடித்தார். நானும் கை ஓங்கினேன். அதன்பிறகு அவர் சென்றுவிட்டார். நான் என் நண்பர்களுடன் பேசி கொண்டிருந்த போது பின்னால் வந்த கட்டிங்பிளேயரால் என் பின் மண்டையில் அடித்து நான் திரும்பி பார்க்கும் போது என்னுடைய வலது பக்க கண்ணருகில் கட்டிங்பிளேயரால் அடித்துவிட்டார். நான் மயங்கி விழுந்துவிட்டேன். என்னை என்னுடைய நண்பர்களே மதுராந்தகம் அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்த மருத்துவர்கள் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னார்கள். செங்கல்பட்டு முதலுதவி சிகிச்சை அளித்தனர். பின்னர் என்னை மேல்சிகிச்சைக்காக எக்மோர் கண் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். நான் சென்னை எக்மோர் அரசு கண் மருத்துவமனையில் 1 1/2 மாதம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். நான் எக்மோர் மருத்துவ மனையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்துவிட்டு எங்கள் ஊர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள். அதன் பிறகு என் மாமா மதுராந்தகம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**9.** அ.சா.3 தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும். போன வருடம் 7 வது மாதம் 06 ம் தேதி இரவு 9.30 மணிக்கு தண்டரைபேட்டை கிராமத்தில் எனது வீட்டிற்கு பரத் வந்தார். எங்கள் ஊர் கூத்து மேடையில் நண்பர்களுடன் பேசி கொண்டிருந்த போது அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. நான் பரத்தை எனது வீட்டிற்கு அழைத்து வரும் போது பஞ்சாயத்து அலுவலகம் அருகே வரும் போது ஆஜர் எதிரி பரத்தை பார்த்து ஏன்

இங்க வந்து பிரச்சினை செய்தார் நான் சமாதானம் செய்து அனுப்பிவிட்டேன். அதற்கு பின்னர் தண்டலம் பஸ்டாண்டு அருகே எதிரி பரத்தை கட்டிங்பிளேயரால் கன்னத்தில் குத்திவிட்டார். பின்னர் காயம்பட்டவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு முடியாது என்பதால் சென்னை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** அ.சா.4 தனது வாய்மொழி சாட்சியத்தில் 06.07.2024 அன்று நேரம் தெரியவில்லை இரவு நேரத்தில் நான் கோவில் திருவிழா என்பதால் கோவிலுக்குள் இருந்தேன். தனசேகர் என்பவர் ரேடியோ செட் போட வந்தார். அப்போது தனசேகருக்கும் வேறு நபருக்கும் சண்டை நடந்ததாக சொன்னார்கள். என்ன சண்டை என்று எனக்கு தெரியவில்லை. வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று கூறி பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

**11.** அ.சா.5 தனது வாய்மொழி சாட்சியத்தில் சாட்சி ஞானசேகர் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். தேதி மாதம் ஞாபகமில்லை, போன மாதத்தில் ஒரு நாள் போலிசார் வந்து தனசேருக்கும் வேறு ஒரு நபருக்கும் நடந்த பிரச்சணை சம்மந்தமாக விசாரணை செய்து என்னிடம் கையெழுத்து கேட்டார், நான் கையெழுத்து செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12.** அ.சா.6 தனது வாய்மொழி சாட்சியத்தில் கடந்த 2024 ம் வருடம் எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்து மருத்துவர் வினோத்குமார் என்பவரின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். தற்போது அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 06.07.2024 ம் தேதி மருத்துவர் வினோத்குமார் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது இரவு 11.30 மணிக்கு பரத் என்பவர் தன்னை தெரிந்த ஒரு நபர் அவரது வீட்டின் அருகே 11.00 மணிக்கு கட்டிங்பிளேடால் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்த நபரை பரிசோதித்தபோது அவருக்கு வலது புறுவத்தின் கீழ் 7x3x1 cm அளவுள்ள கிழிந்த காயமும், தலையில் கன்றிய காயமும் இருந்தது. பின்னர் அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட

காயம் சொர்ப்ப காயம் என்று சான்று வழங்கியுள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** அ.சா.7 தனது வாய்மொழி சாட்சியத்தில் சாட்சி சுரேஷ் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 06.07.2024 அன்று எங்கள் ஊரில் ரேடியோ செட் போடும் தனசேகர் என்பவருக்கும் பரத் என்பவருக்கும் சண்டை நடந்ததாக சொன்னார்கள், அப்போது நான் இல்லை. 09.07.2024 அன்று போலிசார் வந்து அந்த சண்டையை பற்றி விசாரித்தார்கள். அதற்கு என்னை சாட்சியாக இருக்க சொன்னார்கள், நான் சாட்சியாக இருந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14.** அ.சா.8 இந்த வழக்கின் விசாரணை அதிகாரி இந்த வழக்கை பற்றி விரிவாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி சாட்சிகள் மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ததில், அ.சா.1 ஆன குற்றமுறையீட்டாளர் அவர் அளித்த புகாரில் உள்ள சங்கதிகளை அனுசரித்து வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 ன் வாய்மொழி சாட்சியத்தை அனுசரித்து வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா.2 ம் அவருடைய நண்பரான வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக பட்டியலிடப்பட்டுள்ள அ.சா.3 ம் சாட்சியம் அளித்துள்ளனர்.

**15.** மேற்கண்ட அ.சா.1 அளித்த புகாரையும் அ.சா.1 முதல் அ.சா.3 ன் வாய்மொழி சாட்சியத்தையும் ஒருசேர பார்க்கையில் அ.சா.ஆ.1 புகாரில் அ.சா.1 ஐ இவ்வழக்கின் எதிரி 06.07.2024 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி பல பேர் மத்தியில் அசிங்கமாக திட்டி, திருப்புலியால் அ.சா.2 ன் கண்ணில் குத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 அளித்த புகாரில் இந்த வழக்கு குற்ற சம்பவம் எங்கு வைத்து நடந்தது. சம்பவம் நடந்த இடம் எந்த இடம் என்பதை பற்றி தெளிவான விளக்கம் எதுவும் இல்லை.

**16.** மேலும் அ.சா.1 புகாரில் சம்பவமானது இரவு சுமார் 10.00 மணியளவில் நடந்ததாக

குறிப்பிட்டுள்ளார். அதே போல் அ.சா.2 க்கு கொடுக்கப்பட்ட விபத்து பதிவேட்டில் அ.சா.2 06.07.2024 அன்று இரவு 11.30 மணியளவில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுள்ளார் என்பதும், அவ்வாறு சிகிச்சைக்கு சென்ற போது மருத்துவரிடம் சம்பவம் 06.07.2024 அன்று இரவு 11.00 மணியளவில் நடந்ததாக கூறியுள்ளார் என்பதும் அ.சா.ஆ. 4 ன் மூலம் தெரியவருகிறது. ஆனால் இந்த வழக்கின் குற்றமுறையீட்டாளரான அ.சா.1 நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் 06.07.2024 அன்று மதியம் அ.சா.1 ன் சகோதரி போன் செய்து அ.சா.2 ஐ எதிரி அடித்துவிட்டதாக கூறியதாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த நிலையில் இந்த வழக்கு குற்ற சம்பவம் அ.சா.1 ன் வாய்மொழி சாட்சியத்தில் கண்டவாறு 06.07.2024 மதியம் நடந்ததா அல்லது அ.சா.ஆ.4 ல் கண்டவாறு 11.00 மணிக்கு நடந்ததா அல்லது அ.சா.ஆ.1 புகாரில் கண்டவாறு இரவு 10.00 மணியளவில் நடந்ததா என்ற சந்தேகம் எழுகிறது.

**17.** மேலும் அ.சா.1 புகாரில் சம்பவம் எங்கு வைத்து நடந்தது என்பதை பொறுத்து குறிப்பான விளக்கம் எதுவும் இல்லை. அதே போல் அ.சா.1 ம் சம்பவம் எங்கு வைத்து நடந்தது என்பதை பொறுத்து குறிப்பிட்டு வாய்மொழி சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. வழக்கு குற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 06.07.2024 அன்று இரவு 10.00 மணியளவில் தண்டரைபேட்டையில் பாட்டு கச்சேரி நடந்ததாகவும் அங்கு அ.சா.2 நண்பர்களுடன் பேசி கொண்டிருந்த போது எதிரி அ.சா.2 ஐ அசிங்கமாக பேசி கையால் அடித்ததாகவும் பின்னர் அ.சா.2 நண்பர்களுடன் பேசி கொண்டிருக்கும் போது எதிரி பின்னால் வந்து கட்டிங்பிளேடால் அ.சா.2 ன் பின் மண்டையில் அடித்ததாகவும், அப்போது அ.சா.2 திரும்பி பார்க்கும் போது எதிரி கட்டிங்பிளேடால் வலது பக்க கண்ணருகில் அடித்துவிட்டதகாவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18.** மேற்படி இந்த வழக்கு குற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 ம் சம்பவம் தண்டரைபேட்டை கிராமத்தில் எங்கு வைத்து நடந்தது என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 சம்பவ தினத்தன்று தண்டரைபேட்டை கூத்து மேடை அருகே நண்பர்கள் பேசி கொண்டிருந்த போது சண்டை நடந்ததகாவும், பின்னர் அ.சா.3 அவரது நண்பரான அ.சா.2 ஐ வீட்டுக்கு அழைத்து செல்லும் போது, பஞ்சாயத்து அலுவலத்தின் அருகே வந்து எதிரி சண்டை

போட்டதாகவும் பின்னர் தண்டலம் பஸ்டாண்டு அருகே எதிரி அ.சா.2 ஐ கட்டிங்பிளேடால் கண்ணத்தில் குத்திவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**19.** இந்த நிலையில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.6 மற்றும் 7 ஆன பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை பார்வையிட்டதில், சம்பவ இடமானது ஊராட்சி மன்ற அலுவலகத்தின் எதிரே என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இந்த வழக்கு சம்பவத்தை கண்ணுறற் சாட்சியான அ.சா.3 வழக்கு சம்பவமானது பேருந்து நிறுத்ததின் அருகே நடந்தாக சாட்சியம் அளித்துள்ளார். இந்த நிலையில் வழக்கு குற்ற சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்ற சந்தேகம் எழுகிறது.

**20.** மேலும் புகாரில் எதிரி அ.சா.2 ஐ திருப்புலியால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.2 மற்றும் அ.சா.3 எதிரி கட்டிங்பிளேடால் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளனர். ஆனால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்ற அ.சா.2 தன்னை தெரிந்த நபர் கட்டிங்பிளேடால் தாக்கியதாக தெரிவித்ததாக அ.சா.6 வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். இந்த நிலையில் எதிரி அ.சா.2 ஐ திருப்புலியால் தாக்கினாரா அல்லது கட்டிங்பிளேடால் தாக்கினாரா அல்லது கட்டிங்பிளேயரால் தாக்கினாரா என்ற சந்தேகம் எழுகிறது. அரசு தரப்பில் எதிரி பயன்படுத்தியதாக கூறப்படும் ஆவணத்தை கைப்பற்றி இந்த வழக்கில் சான்று பொருளாக தாக்கல் செய்யவில்லை. அதனால் எதிரி என்ன ஆயுதத்தால் அ.சா.2 ஐ தாக்கினார் என்ற சந்தேகம் வலுவடைகிறது.

**21.** மேலும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் குற்ற சம்பவமானது மதுராந்தகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் நடந்ததாக குறிப்பிட்டுப்பட்டுள்ளது. ஆனால் இந்த வழக்கின் விசாரணை அதிகாரி தன்னுடைய குறுக்கு விசாரணையில் "**எதிரியும் பரத்தும் தண்டலம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். தண்டலம் கிராமம் மேல்மருவத்தூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான்**". என்றும் "**தனசேகருக்கும் பரத்துக்கும் மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மருத்துவர் என்னுடைய விசாரணையில் பரத் என்பவரை எங்கு வைத்து தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் தண்டலம் கிராமத்தில் வைத்து தாக்கியதாக சொல்லியுள்ளார்**". என்றும் சாட்சியம்

அளித்துள்ளார். மேற்கண்ட விசாரணை அதிகாரி வாய்மொழி சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்ததில் இந்த வழக்கு குற்ற சம்பவமானது மதுராந்தகம் காவல் நிலையத்தின் எல்லைக்குள் நிகழவில்லை என்பதும், மேற்படி சம்பவ இடமானது மேல்மருவத்தூர் காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட பகுதி என்பதும் தெரியவருகிறது. இந்த நிலையில் மதுராந்தகம் காவல் துறையினர் எந்த அடிப்படையில் தங்கள் எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதியில் நடந்த குற்ற சம்பவத்தை விசாரணை செய்து இந்த நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தனர் என்பதை பொறுத்தும் அரசு தரப்பில் எந்த விளக்கமும் இல்லை.

**22.** மேலே கண்ட விவாதங்களின் அடிப்படையில் இந்த வழக்கு குற்ற சம்பவமானது எந்த இடத்தில் வைத்து எந்த தேதியில் எத்தனை மணிக்கு நடந்தது, எதிரி அ.சா.2 ஐ என்ன ஆயுதத்தால் தாக்கினார் என்ற சந்தேகங்கள் வலுவாக எழுகிறது. இந்த வழக்கில் எழும் சந்தேகங்களின் பலனை எதிரிக்கு அளித்து அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக பிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS ன் கீழான குற்றம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானிக்கப்படுகிறது.

**23.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்தபடி, இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரி பிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**24.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்கு சொத்து குறித்த உத்தரவு ஏதுமில்லை.

**25.** எதிரியின் பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்துசெய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11 ஆம் நாள் வியாழன்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VALLIAMMA

Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.11 10:27:44 +0530

நீதித்துறை நடுவர் எண். 1
மதுராந்தகம்.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| Prosecution Witness No. | List of Witness | Name of the Witness | Description |
|---|---|---|---|
| 1 | PW1 | அருண்ராஜ் த/பெ.அருள்தாஸ் | Complainant |
| 2 | PW2 | பரத் த/பெ.துரை | Victim witness |
| 3 | PW3 | முனியாண்டி த/பெ.தேவராஜ் | Eye-Witness |
| 4 | PW4 | தாரணிபதி த/பெ.தட்சிணாமூர்த்தி | Eye-Witness |
| 5 | PW5 | சுரேஷ் த/பெ.குப்பன் | Mahazar witness |
| 6 | PW6 | ஜெயப்பிரியா /மருத்துவர் | Expert witness |
| 7 | PW7 | ஞானசேகரன் த/பெ.நடேசன் | Mahazar witness |
| 8 | PW8 | ராஜா /காவல் உதவி ஆய்வாளர் | Investigating Officer |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| Exhibit No. | Description of the Exhibits | Proved by/ Attested by |
|---|---|---|
| Ex.P.1 | புகாரில் உள்ள கையொப்பம் | PW-1 |
| Ex.P.2 | பார்வை மகசரில் உள்ள அ.சா.2 ன் 2 வது கையொப்பம் | PW-5 |
| Ex.P.3 | மருத்துவர் வினோத்குமார் என்பவர் பரத் என்பவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய | PW-1 |

| | | |
|---|---|---|
| | காயச்சான்று | |
| Ex.P.4 | பார்வை மகசரில் உள்ள அ.சா.7 ன் 1 வது கையொப்பம் | PW–7 |
| Ex.P.5 | முதல் தகவல் அறிக்கை | PW–8 |
| Ex.P.6 | பார்வை மகசர் | PW–8 |
| Ex.P.7 | மாதிரி வரைபடம் | PW–8 |

அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை
எதிரி தரப்பு சாட்சிகள் :– இல்லை
எதிரி தரப்பு சான்றாவணம் :– இல்லை
எதிரி தரப்பு சான்று பொருள் :– இல்லை

VALLIAMMA

Judicial Magistrate No.1
Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.06.11 10:27:57 +0530

நீதித்துறை நடுவர் எண். 1
மதுராந்தகம்.

**CC 451/2024**

**11.06.2026**

எதிரி ஆஜர். தீர்ப்பு திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமாகததால் எதிரி BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3) of BNS – ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை Bharathiya Nagarik Suraksha Sanhita, 2023 பிரிவு 271(1)ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**JMI/MKM**